**பாசனத்திற்கு வெம்பக்கோட்டை அணை திறப்பு**

First Published : 03 Jan 2012 12:10:36 PM IST

சிவகாசி, ஜன. 2: பாசனத்திற்காக வெம்பக்கோட்டை அணையில் இருந்து திங்கள்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

சிவகாசி நகருக்கு குடிநீர் ஆதாரமாக உள்ளது வெம்பக்கோட்டை அணை. இந்த அணையின் கொள்ளளவு 7 மீட்டர் உயரம். அணையில் 4 மீட்டர் உயரம் தண்ணீர் உள்ளது.

இந் நிலையில், சாத்தூர் அருகே உள்ள கொல்லபட்டியில் உள்ள விவசாயிகள், தங்களது நெற்பயிருக்கு தண்ணீர் வேண்டியுள்ளது. எனவே வெம்பக்கோட்டை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து ஆட்சியர் மு.பாலாஜி, அணையைத் திறந்துவிட உத்தரவிட்டார்.

பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் மனோகரன் அணையில் உள்ள ஒரு மதகைத் திறந்தார். இதன் மூலம் அணையில் இருந்து வினாடிக்கு 100 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது.

**உணவுப் பாதுகாப்பு சட்ட விழிப்புணர்வுக் கூட்டம்**

First Published : 03 Jan 2012 03:05:00 PM IST

தூத்துக்குடி, ஜன.2: தூத்துக்குடி இந்திய வர்த்தக சபை சார்பில் விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் பொன்விழா அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, அதன் தலைவர் டி. ஜான்சன் தலைமை வகித்தார். மாவட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் 2006-ன் நியமன அலுவலர் எம். ஜகதீஷ் சந்திரபோஸ் பேசினார். தூத்துக்குடி நகர உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் எஸ். சந்திரமோகன், டி. ராமகிருஷ்ணன், ஊரக உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் மாரியப்பன், சண்முகசுந்தரம் ஆகியோர் உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். சங்க நிர்வாகிகள் எஸ்.கே.எஸ்.சி. நடராஜன், வி. ராமசுப்பிரமணியன், டி. பிரமானந்தம், சி.என். தர்மராஜ், ஏ.எஸ். தனபாலன், நரேன் தர்மராஜ், சந்தோஷ்குமார், டி.ஆர். கந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். சங்கத்தின் செயலர் டி.ஆர். கோடீஸ்வரன் நன்றி கூறினார்.

**ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் நிவாரணம்: விவசாயிகள் கோரிக்கை**

First Published : 03 Jan 2012 10:57:59 AM IST

செஞ்சி,ஜன.2: செஞ்சி பகுதியில் சேதம் அடைந்த நெல் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க விழுப்புரம் மாவட்ட துணைத் தலைவர் கோ.மாதவன் மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதன் விபரம்: சமீபத்தில் தானே புயலால் பெய்த மழையின் காரணமாக செஞ்சி வட்டத்தில் குறிப்பாக செஞ்சி, வல்லம் ஒன்றியங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் சேதம் அடைந்தது. இதே போல் கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களும் புயலில் முறிந்து விழுந்து சேதம் அடைந்தன.

குறிப்பாக ஆலம்பூண்டி, சத்தியமங்கலம், கணக்கன்குப்பம், கெங்கவரம், சோ.குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்தை அடைந்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் உடனடியாக சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்டு நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரத்தை நிவாரணமாக விவசாயிகளுக்கு பெற்றுத்தர வேண்டும் என சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளார்.

**மானாவாரி திட்டத்தில் நிலக்கடலை சாகுபடி**

First Published : 03 Jan 2012 12:27:07 PM IST

கமுதி, ஜன. 2: கமுதி பகுதியில மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலக்கடலை பயிர் சாகுபடியை மத்திய திட்ட ஆலோசகர், வேளாண் துறை அலுவலர்களுடன் வெள்ளிக்கிழமை நேரில் ஆய்வு செய்தார் (படம்).

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் மூலம், கமுதி வட்டாரத்தில் 100 ஹெக்டேர் அளவில் முதற்கட்ட சாகுபடி பயிராக நிலக்கடலையும், 2-ம் கட்ட சாகுபடி பயிராக உளுந்தும் சாகுபடி செய்ய திட்டமி டப்பட்டுள்ளது.

இதற்குரிய பணிகளுக்கு சம்பக்குளம் உள்பட 4 கிராமங்களை கமுதி வட்டார வே ளாண்மைத் துறையினர் தேர்வு செய்துள்ளனர். இதில் சம்பகுளத்தில் தொகுப்பு முறை பண்ணை அடிப்படையில் மானாவாரி நிலக்கடலை பயிரிடப்பட்டிருப்பதை, மத்திய வேளாண்மை வளர்ச்சித் திட்ட ஆலோசகர் உமாசங்கர் நேரில் ஆய்வு செய்தார்.

இந்த திட்டம் மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர் வழங்கி வரும் உயிர் உரம் மற்றும் ஜிப்சம் உரம் குறித்தும், இவற்றின் பயன்பாடுகள் பற்றியும் திட்ட ஆலோசகர் கேட்டறிந்தார்.

திட்ட செயல்பாடுகள் குறித்து ஆலோசகர் தெரிவித்த விவரங்களைப் பற்றி விவசாயிகளிடம் ராமநாதபுரம் மாவட் உதவி இயக்குநர் (பொறுப்பு) ராஜேந்திரன், துணை இயக்குநர் சக்திமோகன் ஆகியோர் விளக்கினர்.

மானாவாரி மேம்பாட்டுத் திட்ட நிலக்டலை பயிர் சாகுபடியில் ஏற்படும் இடர்பா டுகள், பயன்பாடுகள் குறித்து விவசாயிகள் அய்யனார், நாகராஜன், குருவையா, சொக்கு, மலைப்பாண்டி, நீலமேகம் ஆகியோர் திட்ட ஆலோசகரிடம் விவரித்தனர்.


திட்ட ஆலோசகருடன் கமுதி வட்டார வேளாண் துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) மா.கெப்தமன், துணை அலுவலர் பா.சேதுராமு, உதவி அலுவலர்கள் செந்தில் பாலா மணி, பழனிவேல்ராஜன், முனியாண்டி, பணியாளர் கதிரேசன் ஆகியோரும் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நெல் சாகுபடியில் பயிர் பாதுகாப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2012,00:00 IST



**குருத்துப்புழு:** இதனை அழிக்க ஏக்கருக்கு 400 மில்லி மானோகுரோட்டோபாஸ் அல்லது 100 மில்லி டைமக்ரான் இவைகளில் ஏதாவது ஒன்றினை தெளிப்பானுக்கு தக்கபடி நீருடன் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

**இலைசுருட்டுப்புழு:** இந்தப்புழு பயிரில் கதிர் பருவத்தின்போது கடுமையாகத் தாக்குகின்றது. கதிர் பருவத்தின்போது மேகமூட்டமும், தூறலும் இருந்தால் நிச்சயமாக இந்தப்புழு தாக்குதல் நடக்கும். இதைத் திறன்பட கட்டுப்படுத்த வேண்டும். இந்தக்கொடிய பூச்சியைத் தடுக்க 300 மில்லி எண்டோசல்பான் அல்லது மானாகுரோட்டோபாஸ் 250 மில்லி அல்லது ஜோலோன் 600 மில்லி அடிக்க வேண்டும்.

**இலை உறை அழுகல் நோய்**: கதிர் தோன்றும் சமயத்தில் இந்த நோய் தோன்றும். முதலில் தொண்டை பாகத்தில் கதிர்கள் பிடித்துக்கொள்ளப்பட்டு அவைகள் வெளியே வராமல் தத்தளிக்கும். சில கதிர்கள் தொண்டைக்குள் பாதியும் மீதி வெளியேவந்துதொங்கிக் கொண்டு இருக்கும். இலைப்பட்டையின் மேல் சாக்லேட் மிட்டாய் போன்ற அடர்ந்த பழுப்புநிறம் கொண்ட புள்ளிகள் தோன்றும். இவைகளில் ஒன்றுடன் ஒன்று இணைந்து தோகை முழுவதும் பரவி இறுதியில் கதிர் உறை முற்றிலும் அழுகிவிடும். இந்த நிலையிலும் நோயினை அழிக்க 100 கிராம் பவிஸ்டின் அல்லது 200 மில்லி ஹீனோசன் அல்லது 400 கிராம் டைத்தேன் இவைகளில் ஏதாவது ஒன்றினை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் உபயோகித்து ஒரு ஏக்கர் பயிரின் மேல் தெளிக்க வேண்டும். அதிகம் தூர்கள் கட்டும் பருவத்திலும் மறுபடியும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

**பேக்டீரியல் இலைக்கருகல் நோய்:** நோய் தாக்கும்போது நாற்றுக்களின் இலைகளில் வட்டவடிவ மஞ்சள் நிறப்புள்ளிகள் உண்டாகி, ஒன்றுடன் ஒன்று இணைந்து நாற்றுக்கள் கருகிவிடும். நோயைத்தடுக்க 120 கிராம் ஸ்டெப்டோமைசின் சல்பேட், டெட்ராமைசின் சல்பேட்கலவை மற்றும் 200 கிராம் தாமிர ஆக்சி குளோரைடு இவைகளை தெளிப்பானுக்கு தக்கபடி நீருடன் கலந்து ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்க வேண்டும். வளர்ச்சி அடைந்த பயிர்களில் இலையின் நுனியில் இந்நோய் தோன்றி ஓரங்கள் மூலம் கீழ் நோக்கிப் பரவும். முதலில் நீர் கோர்த்த பகுதியாகத் தென்படும். தீவிரமாகத் தாக்கும்போது முழு இலைப்பரப்பும் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறிவிடும். இலைகள் கருகிவிடும். இந்த நோய் நாற்றங்கால் தருணம் பயிர் தூர்கட்டும் சமயம், தொண்டைக் கதிர் சமயம் ஆகிய கட்டங்களில் தோன்றும். அக்ரிமைசின் அல்லது பிளாண்டோமைசின் இவைகளில் ஏதாவது ஒன்றினை ஏக்கருக்கு 120கிராம் என்ற அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். உடனே பைடிலான் மருந்து 600 கிராம் அளவினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**இயற்கை முறை கட்டுப்பாடு**: விரும்பும் விவசாயிகள் பூஞ்சாள நோய்கள் வராமல் தடுக்க பூஞ்சாள உயிர்க்கொல்லியாகிய சூடோமோனஸ் புளோரசன்ஸ் அதாவது பி.எப். பவுடரை

பயன்படுத்தலாம். பி.எப். பவுடர் விதையின் மேல்புறம் மற்றும் மண்வழி பரவும் வேரழுகல், தூர்வாடல், தண்டழுகல், இலைக்கருகல், குலைநோய், இலையுறை அழுகல் நோய் போன்ற வியாதிகளை கட்டுப்படுத்துகின்றது. நெல் பயிரில் கீழ்க்கண்டபடி உபயோகிக்கலாம்.- எஸ்.எஸ்.நாகராஜன்

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2012,00:00 IST

**குதியரநூடிர் சடிகுபடி நுட்பங்கள்**: தமிழ்நாட்டில் ராமநாதபுரம், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, மதுரை மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. இதன் உமி நீக்கிய அரிசி மிகவும் சத்தானது. சுவையானது. இதன் அரிசியைச் சமைத்து உணவாக உண்ணலாம். அரைத்து மாவாக்கி ரொட்டி தயாரிக்கலாம். வளமற்ற நிலம் கொண்ட உழவர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் இத்தாவரத்தை அதிகமாக பயன்படுத்துகின்றனர். இது மாட்டுத் தீவனமாகவும் தானியமாகவும் மக்காச் சோளத்துடன் கலந்து பயிரிடப்படுகிறது.

**பருவம்**: மானாவாரி - குதிரைவாலி ஒரு அதிசயப்பயிராகும். வறட்சி, மண் உவர்ப்பு தாங்கி வளரக்கூடிய இப்பயிர் நீர் தேங்கிய நிலத்திலும் வளரும். இறவையாக சித்திரை, ஆடி, மார்கழிப் பட்டங்களிலும் மானாவாரியில் ஆடி, புரட்டாசிப் பட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. அனைத்து வகையான நிலங்களிலும் பயிரிடுவதற்கு ஏற்றது. ஆனாலும் செம்மண் இருமண் கலந்த நிலங்கள் மிகவும் உயர்ந்ததாகும்.

**விதையளவு**: விதை விதைக்க விதைப்பானை பயன் படுத்துவதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கை நன்கு பராமரிக்கப்படுவதால் அதிக விளைச்சலைப் பெறலாம். விதைப்பான் கொண்டு விதைப்பதற்கு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவைப்படும். வரிசைக்கு வரிசை 22 செ.மீ. இடைவெளியும் செடிக்குச் செடி 10 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**ரகங்கள்:** கே.1. வயது 85 நாட்கள். மகசூல் 1000 கிலோ/எக்டர். கே2 - 90 நாட்கள். மகசூல் 1250 கிலோ. கோ-1 வயது : 110 நாட்கள். மகசூல் 1500 கிலோ. கோ(கே.வி)2 - 95 நாட்கள். மகசூல் 2114 கிலோ/எக்டர்.

ஒரு எக்டர் நிலத்தில் 5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது இட்டு உழவேண்டும்.

ஒரு ஏக்கருக்கு முறையே 40:20:20 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களை உரமாக அளிக்க வேண்டும். விதைக்கும்போதே அடியுரமாக மணி, சாம்பல் சத்துக்களை முழுவதுமாக இடவேண்டும். தழைச்சத்தை மட்டும் பாதி அளவு இட்டு, மீதமுள்ளதை சரி பாதியாகப் பிரித்து மேலுரமாக இருமுறை விதைத்த 25-30, 40-45ஆவது நாட்களில் இடவேண்டும். பருவமழை சரியாக இல்லாத காலங்களில் மீதமுள்ள தழைச்சத்து 50 சதவீதத்தையும் ஒரே முறையில் மண்ணின் ஈரத்தன்மைக்கேற்ப மேலுரமாக இடவேண்டும்.

**களை நிர்வாகம்:** வரிசை விதைப்பு செய்திருந்தால் 2-3 முறை இடை உழவும் ஒருமுறை கைக்களையும் எடுக்க வேண்டும். கை விதைப்பு முறையில் 2 முறை கைக்களை எடுக்க வேண்டும்.

**நீர் நிர்வாகம்**: இறவையில் விதைத்த நாளும் விதைத்த 3ம் நாளும் தண்ணீர் கட்டவேண்டும். பின் தேவைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் காட்ட வேண்டும். மானாவாரி நிலங்களில் பண்ணைக் குட்டைகளில் தேங்கி இருக்கும் நீரைத் தெளிப்பான் கொண்டு பூக்கும், பால் பிடிக்கும் நிலங்களில் தெளிக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**: சரியான பருவத்தில் விதைக்கும் பொழுது எந்த வகை பூச்சி, பூஞ்சாணமும் அதிகமாக இந்தப் பயிரைத் தாக்குவதில்லை.

**அறுவடை, சேமிப்பு**: கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். பின் கதிர்களைக் களத்தில் காயவைத்து அடித்து தானியத்தைப் பிரித்தெடுக்க வேண்டும். பின் இவற்றை நன்றாக காயவைத்து சுத்தம் செய்து காற்று புகாமல் சேகரித்து வைக்க வேண்டும். தானியங்களைப் பிரித்தபின் உள்ள தட்டையையும் நன்கு உலர்த்தி சேமித்து வைத்தால் வருடம் முழுவதும் கால்நடைகளுக்குத் தீவனமாகத் தரலாம்.

**சந்தை நிலவரம்**: ஒரு கிலோ குதிரைவாலி இருபது முதல் இருபத்தைந்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. குதிரைவாலி, பிற குறு தானியங்களில் உள்ள உணவுச்சத்துக்கள், அவற்றின் மருத்துவ குணங்கள் பற்றி மக்களுக்கு தெரிய ஆரம்பித்துள்ளதால் எதிர்காலத்தில் இவற்றின் தேவை அதிகரிக்கும். ஒரு ஏக்கருக்கு 800 கிலோ தானிய விளைச்சல் கிடைத்தால் மொத்த லாபமாக ரூ.16,000 கிடைக்கும். ஏக்கருக்கு ரூபாய் 5000 செலவு என்ற போதும் நிகர லாபமாக ரூ.11,000 பெற முடியும். (தகவல்: முனைவர் அ.நிர்மல்குமார், முனைவர் பெ.வீரபத்திரன், செல்வி சு.ரேவதி, சிறு தானியத்துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-245 0507).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**புதிய ஊட்டமேற்றிய கம்போஸ்ட் தொழு உரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2012,00:00 IST



**செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க தேவையான பொருட்கள்**: மாட்டுச்சாணம்-250 கிலோ, பண்ணைக் கழிவு-250 கிலோ, யூரியா-5.5 கிலோ, அசிட்டோபேக்டர் அல்லது அசோஸ் பைரில்லம் உரம்-1 கிலோ, டி.ஏ.பி. உரம்-25 கிலோ அல்லது இப்கோ 20 20 40 கிலோ அல்லது ராக் பாஸ்பேட் 140கிலோ, பாஸ்போ பேக்டீரியம் 1 கிலோ, ஜிப்சம்-100 கிலோ.

**தழை, மணி, கந்தகம், சுண்ணாம்பு சத்துக்கள் மற்றும் உயிர் உரங்கள் கொண்ட மதிப்பு கூட்டப் பட்ட தொழு உரம் தயாரிக்கும் முறை**: கம்போஸ்ட் தயாரிக்க உதவும் குழி முற்றிலும் சூரிய வெளிச்சம் படும் மேடான இடத்தில் அமையும்படியாக தேர்வு செய்ய வேண்டும். 10 அடி நீளம், 5 அடி அகலம், 3 அடி ஆழம் உள்ள குழியை எடுக்க வேண்டும். சோகை தாள் மற்றும் பயிர் கழிவுகள் 250 கிலோ மற்றும் சாணம் 250 கிலோ சேகரிக்க வேண்டும். 5.5 கிலோ யூரியா, 40 கிலோ இப்கோ 20:20 அல்லது இப்கோ டிஏபி 25 கிலோ அல்லது ராக்பாஸ்பேட் 140 கிலோ. இப்கோஜிப்சம் 100 கிலோ ஆகியவற்றை பசும்சாண கரைசலுடன் கலந்து கெட்டியான கரைசலாக்கிக் கொள்ள வேண்டும்.

குழியில் ஒரு வரிசை மக்கிய கழிவுகள் இட்டு அதற்கு மேல் ஒரு வரிசை சாண உரக்கரைசல்

தெளிக்க வேண்டும். இதுபோன்ற 16 வரிசைகள் இட்டு குழியினை நிரப்பி முடிக்க வேண்டும். மேலாக கெட்டியான சாண கரைசல் கொண்டு மூடிவிட வேண்டும். மழை மற்றும் காற்றிலிருந்து பாதுகாக்க குழி குவியலை முழுவதும் பாலிதீன் தாள் கொண்டு மூட வேண்டும்.

குழி இடப்பட்ட கழிவுகள் தன்னிடத்தே கொண்டுள்ள ஈரத்தினை பயன்படுத்தி, மக்கி, ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு ஆரம்பிக்கின்றது. மூன்று அல்லது நான்கு வாரங்கள் கழிந்த பின்னர் குழி குவியலில் உள்ள கழிவுகளை மேலும் கீழுமாக கலந்துவிட்டு மூடிவிட வேண்டும். கோடைகாலமாக இருந்தால் கழிவு கலவையில் 60 முதல் 70 விழுக்காடு ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**புதிய ஊட்டமேற்றிய கம்போஸ்ட் தொழு உரத்தின் பயன்கள்:** மண் வளத்தை அதிகப்படுத்தி அங்ககச் சத்தை கூட்டுகிறது. மண் ஈரத்தன்மையை காக்கிறது. தழை, மணி, கந்தகம் மற்றும் சுண்ணாம்பு சத்துக்களை கூடுதலாக தருகின்றது. தழை, மணிச்சத்து கிடைக்க உதவும் பாக்டீரியாக்களின் எண்ணிக்கையை கூட்டுகிறது. மண்ணில் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்தினை பயிருக்கு கிடைக்க வழிவகை செய்கிறது. மானாவாரி நிலங்களுக்கு மிகவும் ஏற்றதாகும். தயாரிக்க செலவு ரூ.1000. ஆனால் 5 மடங்கு நன்மையை அதிகரிக்கின்றது. கனிம உரங்களின் பயன்பாட்டு திறனை அதிகரிக்க இந்த தொழு உரம் மிகவும் உதவுகிறது. **தொடர்புக்கு:** மணிகண்டன், இப்கோ மண்டல அலுவலகம், கோவை. போன்: 0422-224 0339, 224 8633.-கே.சத்தியபிரபா, உடுமலை.

**விவசாயிக்கு மானியத்தில் வேளாண் கருவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2012,01:45 IST

கருத்தை பதிவு செய்ய

கும்பகோணம்: கும்பகோணத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2011 2012ம் ஆண்டுக்கு மானிய விலையில் விவசாய கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சி கும்பகோணம் ஸ்ரீநகர்காலனியில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு உதவி செயற்பொறியாளர் தசரதராமன் தலைமை வகித்து பேசியதாவது:

விவசாயத்தில் தொழிலாளர்களின் பற்றாக்குறையை போக்கி, அதிக மகசூலை உற்பத்தி செய்ய நவீன தொழில்நுட்ப முறைகள் கையாளப்பட்டு வருகிறது.

விவசாயத்திற்கு தேவையான பவர்டில்லர், நெல் அறுவடை இயந்திரம், நடவு இயந்திரம்,

கைத்தொளிப்பான்கள் ஆகியவை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, மிகவும் குறைவான செலவில் அதிக மகசூல் பெறும் செம்மைநெல் சாகுபடி முறையில் களைகளை அகற்ற நவீன பவர்வீடர் எனப்படும் களைஅகற்றும் கருவியை விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணத்தை சேர்ந்த ஓம்சக்தி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தினர் முதன் முதலாக இந்த பவர் வீடர் கருவியை தயாரித்து விவசாயிகளுக்கு வழங்க முன்வந்துள்ளார். இந்த கருவி வாங்குவதற்கு விவசாயிகளுக்கு ஓர் ஏக்கர் நிலம் இருந்தால் போதும்.

வேளாண் துறை அதிகாரிகளை அணுகினால் 50 சதவிகித மானியத்தில் இந்த பவர்வீடர் கருவி வாங்கலாம். 50 சதவிகித தொகை 15 ஆயிரம் ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். இந்த பவீர் வீடர் கருவியில் ஒரு லிட்டர் பொட்ரோலில் இரண்டு மணி நேரம் களைகளை அகற்றலாம். 15 கூலி ஆட்களின் வேலையை மூன்று மணி நேரத்தில் இந்த கருவி அகற்றிவிடும். இதை அனைத்து விவசாயிகளும் வாங்கி அதிக மகசூல் பெற்றிட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், ஓம்சக்தி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனர் கார்த்திகேயன், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர்கள் எழிலன், ஞானசம்மந்தம், செந்தில்குமார் பங்கேற்றனர்.

சுவாமிமலையைச் சேர்ந்த விவசாயி கோவிந்தராஜ், கும்பகோணம் நெல்லுக்கடைத் தெரு விவசாயி குணசேகரனுக்கு பவர்வீடர் கருவி வழங்கப்பட்டது.

**தேங்காய் ஏற்றும் தொழிலாளர்கள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,23:33 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : கோவை மாவட்ட தேங்காய் ஏற்றும் தொழிலாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடந்தது. கவுரவ தலைவர் வெங்கடாசலம், செயலாளர் சண்முகம், பொருளாளர் கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒரேவிதமான பதிவு, ஒரே மாதிரியான சலுகைகளை பெற்றுவரும் பல்வேறு தொழில்களில் பணிபுரிந்து வரும் அமைப்பு சாராத தொழிலாளர்களுக்கு தற்போது தனித்தனி வாரியங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுகிறது. இந்த முறையை மாற்றி, "தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலவாரியம்' என்ற ஒரே பெயரில் செயல்படுத்த வேண்டும். தேங்காய் ஏற்றும் அனைத்து தொழிலாளர்களையும் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகிகள் தேர்வு: கூட்டத்தில், சங்கத்தின் கவுரவ ஆலோசகராக வெங்கடாசலம், ஆலோசகராக பொம்மன், தலைவராக முத்துக்குமார், துணைத்தலைவராக

தங்கவேல், செயலாளராக சண்முகம், இணை செயலாளராக பெரியசாமி, பொருளாளராக கோவிந்தசாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்களாக 12 பேரும் தேர்வு செய்யப்பட்டனர்.

**மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,23:32 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : ஏப்ரலில், மக்காச்சோளம் விலை உயரும் என்பதால்,சேமித்து வைத்து விற்க, விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. உலக அளவில் மக்காச்சோளம், 2010-11ல் 167 மில்லியன் எக்டேரில் பயிரிடப்பட்டு, 860 மில்லியன் டன்கள் உற்பத்தியானது. கடந்த 2011ல், மக்காச்சோள பரப்பு மற்றும் உற்பத்தி, வரலாறு காணாத ஏற்றத்தை கண்டது. இது, 2001ம் ஆண்டைவிட, பரப்பில் 21 சதவீதம்; உற்பத்தியில் 43 சதவீதம், கூடுதலாகும்.

உலக நாடுகளின் உற்பத்தியில் அமெரிக்கா, சீனா, பிரேசில், மெக்சிகோ, அர்ஜென்டீனா, இந்தியா போன்ற நாடுகள், 75 சதவீத பங்கை அளிக்கின்றன. எத்தனாலுக்கான மக்காச்சோளத்தின் தேவை அதிகரிப்பே, உற்பத்தி உயர முக்கிய காரணம். இந்தியாவில், கர்நாடகா (18 சதவீதம்), ஆந்திரா (17 சதவீதம்), மகாராஷ்டிரா (11 சதவீதம்), பீகார் (9 சதவீதம்), ராஜஸ்தான் (7 சதவீதம்), மத்தியப்பிரதேசம் (6 சதவீதம்), உத்தரப்பிரதேசம் (6 சதவீதம்), தமிழ்நாடு (5 சதவீதம்), இமாச்சலப்பிரதேசம் (3 சதவீதம்) ஆகிய, மாநிலங்களில் முக்கியப் பயிராக, மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. தமிழ்நாடு, எக்டேருக்கு 4.68 டன்களை உற்பத்தி செய்து, முன்னிலை வகிக்கிறது. முக்கிய உற்பத்தி மாநிலங்களான ஆந்திரா, பஞ்சாப், கர்நாடகா ஆகிய மாநிலங்களின் உற்பத்தித் திறன் முறையே 3.5 டன், 3.4 டன், 2.4 டன் என, உள்ளன. தமிழ்நாட்டில், ஆண்டிற்கு 11.44 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தியாகிறது. பெரம்பலூர், திண்டுக்கல், கோவை, சேலம், ஈரோடு, விருதுநகர், விழுப்புரம்,தேனி, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில், மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. இவை, தமிழ்நாட்டின் மொத்த மக்காச்சோள உற்பத்தியில் 90 சதவீதம், பங்களிக்கின்றன. வர்த்தக மூலங்களின்படி, தமிழ்நாட்டில் மக்காச்சோள வரத்து, டிசம்பர் இறுதியில் ஆரம்பிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டில் கோழிப்பண்ணை நிறுவனங்கள், கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து, மக்காச்சோளத்தை கொள்முதல் செய்கின்றன. இம்மாத இறுதியில், தமிழ்நாட்டில் இருந்து, அதிக மக்காச்சோள வரத்து எதிர்பார்க்கப்படுவதால், கோழிப்பண்ணை நிறுவனங்கள் மக்காச்சோளத்தை இருப்பில் வைக்கவில்லை. பிற மாநிலங்களில் இருந்து, எதிர்பார்க்கப்படும் நல்ல பயிர் வரத்து, நிலையான உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தேவை ஆகிய காரணங்களினால், டிசம்பர் இறுதிவரை, விலை நிலையாக இருக்கும். கோழிப்பண்ணை

நிறுவனங்கள், புதிய மக்காச்சோளத்தை, மாதத் தேவைக்காக இருப்பில் வைக்க, கொள்முதல் செய்வர்; விலை பெரியதாக குறைய வாய்ப்பில்லை. மார்ச் மாதத்திற்குப்பின், உற்பத்தியை விட தேவை அதிகரிப்பதால், குவிண்டால் ஒன்றுக்கு, விலை 1,200 ரூபாயை தாண்டும். பல்கலையில் இயங்கும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், கடந்த 15 ஆண்டுகளாக, உடுமலை சந்தையில் நிலவிய, மக்காச்சோள விலைகளை ஆதாரமாக வைத்து, ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவின் படி, வரும் ஏப்ரல் வரை குவிண்டாலுக்கு 1,050 முதல் 1,100 ஆக இருக்கும்; ஏப்ரலுக்குப் பின் 1200 ரூபாயை தாண்டும் என, தெரிவிக்கப்படுகிறது. சேமிக்க வசதியில்லாதவர்கள், மார்ச் வரை விலை உயர வாய்ப்பில்லாததால், அறுவடை செய்தவுடன் விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு, வேளாண் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**மல்லிகை, அஸ்கா விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : திருப்பூர் மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளதால், கடந்த வாரம் வரை கிலோ 600 ரூபாயாக இருந்த மல்லிகை, 200 ரூபாயாக குறைந்துள்ளது; அஸ்கா விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் குறைந்துள்ளது.

மார்க்கெட் நிலவரம்:

பெருமாநல்லூர், அவிநாசி, சூலூர் பகுதிகளில் இருந்து வரத்து குறைந்து வருவதை யடுத்து, திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் தக்காளி விலை படிப் படியாக ஏற்றம் பெற்று வருகிறது. கிலோ ஏழு ரூபாயாக இருந்த தக்காளி 10 ரூபாயாகி உள்ளது;

கத்தரி விலை இரண்டு ரூபாய் குறைந்துள்ளது.

தக்காளி (கிலோ) ரூ.10; கத்தரி 24; வெண்டை 22; பீன்ஸ் 30; பாகல் 22; பூசணி 10; அரசாணி 10; காரட் 30; கீரை 20; பொரியல் தட்டை 12; சின்ன வெங்காயம் 20; பெரிய வெங்காயம் 12; சுரைக்காய் 8; பூண்டு 80; முட்டைகோஸ் 16; அவரை 32 ரூபாய்.

மல்லிகை விலை குறைகிறது: பனிப்பொழிவு குறைந்ததால் பூக்கள் சேதம் குறைந்துள்ளது. மதுரை, தேனி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் இருந்து மார்க்கெட்டுக்கு மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரம் வரை கிலோ ரூ.600க்கு விற்கப்பட்ட மல்லிகை, 200 ரூபாயாக குறைந்துள்ளது. மல்லிகை (கிலோ) 200 ரூபாய்; செவ்வந்தி 40; அரளி 120; பட்டுப்பூ 40; சம்பங்கி

50; மாலை (பெரியது) 140, சிறியது

40 ரூபாயாக விற்கப்பட்டது.

பூ மார்க்கெட் சங்க செயலாளர் சக்திவேல் கூறியதாவது:

பனிப்பொழிவு அதிகரித்திருந்ததால் சேதம் அதிகரித்து, மார்க்கெட்டுக்கு வெறும் 100 கிலோ மட்டுமே மல்லிகை வரத்து

இருந்தது. இதனால், விலை பல மடங்கு அதிகரித்தது. தற்போது, பனிப்பொழிவு குறைந்துள்ளதால், மார்க்கெட்டுக்கு 1,000 கிலோ மல்லிகை வரத்து உள்ளதையடுத்து, விலை படிப்படியாக குறைந்து வருகிறது.

மார்கழியில் செடிகள் புதிதாக துளிர்ப்பதற்காக முல்லை செடிகளை விவசாயிகள் வெட்டி விட்டுள்ளதால், முல்லை பூ வரத்து முற்றிலும் தடை

பட்டுள்ளது. மூன்று மாதங்கள் கழிந்து, மாசி மாதம் தான்

முல்லைப்பூ வரத்துவங்கும்,

என்றார்.

அஸ்கா விலை குறைவு: கரும்பு சீசன் துவங்கியுள்ளதால் உற்பத்தி அதிகரித்துள்ளது. மளிகை மார்க்கெட்டில் அஸ்கா விலை மட்டும் கிலோவுக்கு

ரூ.2 குறைந்துள்ளது. 32 ரூபாயாக இருந்த அஸ்கா 30 ரூபாயாகி உள்ளது. பாசிப்பருப்பு (கிலோ) 68; தட்டைப்பயறு 42; பொட்டுக்கடலை 62; கடலை மாவு 55; கடலை பருப்பு 54; பாசிப்பயறு 60 ரூபாய்; உளுந்து (உருட்டு) 70, கருப்பு 60; கடுகு 48; மஞ்சள் 100; மல்லி 70; வரமிளகாய் 90; புளி 95; சுண்டக்கடலை (கருப்பு) 48, வெள்ளை 85 ரூபாய்க்கு விற்கப்பட்டன.

மார்க்கெட் சங்க தலைவர்

பாலசுப்ரமணியம் கூறுகையில், ""இருப்பு அதிகம் உள்ளதால், மளிகை பொருட்கள் விலை கடந்த இரு வாரங்களாக மாற்றம் இன்றி உள்ளது. கரும்பு அறுவடை துவங்கியுள்ளதால், அஸ்கா வரத்து அதிகரித்து விலை கிலோவுக்கு 2 ரூபாய் குறைந்துள்ளது,'' என்றார்.

எண்ணெய் விலையில்

மாற்றம் இல்லை: வரத்து சீராக உள்ளதால் எண்ணெய் விலையில் மாற்றம் இல்லை. கடலை எண்ணெய் 102 ரூபாய்; தேங்காய் எண்ணெய் 97; நல்லெண்ணெய் 100; விளக்கெண்ணெய் 140; ரீபைண்ட் ஆயில் 112; சன்பிளவர் ஆயில் 85; பாமாயில் 65 ரூபாய்க்கு விற்பனையாகின.

**விவசாயிகளுக்கு மானியத்தில் விதைகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,22:18 IST

கள்ளிக்குடி : கள்ளிக்குடி வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு கிலோ ரூ.20 மற்றும் பருத்தி விதை கிலோ ரூ.17 வீதம் வழங்கப்படுகிறது. தேவையான அளவு விவசாயிகள் பெறலாம். விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த புள்ளி விபர கையேடு வழங்கப்பட உள்ளது. அதற்கு விவசாயிகள் மண் மாதிரிக்குரிய கட்டணம் ரூ.20 செலுத்தி தேவையான புள்ளி விபரங்களை கொடுக்க வேண்டும் என வட்டார வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன் கேட்டு கொண்டுள்ளார்.

**புது அரிசி விலை ஒரு ரூபாய் குறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,22:19 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை : அறுவடை முடிந்து, மதுரைக்கு புது அரிசி வரத்து அதிகரித்துள்ளதால், குறிப்பிட்ட ரகங்களின் விலை கிலோவிற்கு ஒரு ரூபாய் குறைந்தது. அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :

தற்போது செல்லப் பொன்னி, டீலக்ஸ் பொன்னி விலை மட்டும் குறைந்துள்ளது. மற்ற அரிசி விலை வரும் வாரங்களில் குறையும். நேற்று ஒரு கிலோ மதுரை டீலக்ஸ் பொன்னி முதல் ரகம் ரூ.33, அடுத்த ரகம் ரூ.26, செல்லப்பொன்னி ரூ.22, ஒட்டுச் செல்ல பொன்னி ரூ.20, ஐ.ஆர்., 20.50 முதல் ரகம் ரூ.24.50, அடுத்த ரகம் ரூ.23.50, ஐ.ஆர்., 36 ரூ.22.50க்கு விற்கப்பட்டது. காவிரி சோனா பொன்னி ரூ.27.50 கர்நாடகா டீலக்ஸ் பொன்னி பழசு ரூ.34.50, மதுரை வெள்ளை பொன்னி பழசு ரூ.36, பச்சரிசி பொன்னி ரூ.30, சூப்பர் சன்னம் பச்சரிசி ரூ.36, மாவு பச்சரிசி ரூ.22.50, பிரியாணி அரிசி ரூ.47, முதல் ரகம் ரூ.53க்கு விற்கப்பட்டது, என்றார்.

**மிளகாய், வெங்காயத்துக்கு இன்சூரன்ஸ் : விண்ணப்பிக்க வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2012,22:47 IST

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில், 2011-12ல் மிளகாய் பயிரிடும் விவசாயிகள் இயற்கை இடம்பாடுகளால் பாதிக்கப்பட்டால் பயிர் இன்சூரன்ஸ் வழங்கப்படுகிறது. இத்திட்டம் திருவாடானை மற்றும் மண்டபம் வட்டாரம் நீங்கலாக பிற ஒன்பது ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. ஒரு ஏக்கர் மிளகாய் பயிருக்கு 21 ஆயிரத்து 480 காப்பீடு செய்யப்படுகிறது. பிரிமியம் 2,760 ரூபாய், வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றவர்களுக்கும், பெறாதவர்களுக்கும் பிரிமியம் தொகையில் 50 சதம், மற்றும் பயிர்க்கடன் பெறாத சிறு மற்றும்

குறு விவசாயிகளுக்கு 55 சதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான கடைசி நாள் ஜன.15. மேலும், வெங்காயப் பயிரிடும் கடன் பெற்ற அனைத்து விவசாயிகள் மற்றும் கடன் பெறாத பெரிய விவசாயிகள் ஏக்கருக்கு பிரிமியம் தொகையாக 2,008ம், கடன் பெறாத சிறு மற்றும் குறு விவசாயிகள் பிரிமியம் தொகையாக 1,807ம் செலுத்தி திட்டத்தில் சேரலாம்.